# பொதுக்காலம் 16ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“நம்மைத் தேடி வருபவர்களுக்கு நாம் உதவிக்கரம் நீட்டும்போது கடவுளின் ஆசியும், புண்ணியமும் நம்மைத் தேடி வரும்” என்ற சிந்தனையைச் சீர்தூக்கி, வாழ்வாக்க அழைக்கிறது இன்றைய ஞாயிறு வழிபாடு.

தனது இல்லத்திற்கு வராவிட்டாலும் தன் கூடார வாயிலின் வெளியே நின்ற மூன்று மனிதர்களை ஆபிரகாம் அழைத்து அவர்களுக்கு விருந்தோம்பல் செய்ததால், இறை ஆசியாகப் பிள்ளை வரம் பெற்றார்.

பல்வேறு செயல்களில் பரபரப்பாக இருந்தாலும், வந்தவர்களோடு மனமுவந்து உரையாடுவதும், உறவாடுவதும்தான் முக்கியம் என்று எடுத்துரைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

மரியா மன்றாட்டு வாழ்வுக்கும், மார்த்தா செயல் வாழ்வுக்கும் சிறந்த மாதிரி. இறைவேண்டல் இல்லாத செயலும், செயல்படாத இறைவேண்டலும் பலனற்றது என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

உடனிருப்பது, ஆறுதல் மொழி கூறுவது, செவிமடுப்பது மட்டுமல்லாது இருப்பதைக் கொடுத்து உதவிக்கரம் நீட்டுவதுதான் மார்த்தா, மரியாவின் பரந்த மனநிலை.

நம் வாழ்விலும் நாமும் இருப்பதைப் பகிர்வோம். இயலாதவர்களோடு உடனிருப்போம். இறைவனில் நல்ல பங்கைத் தேர்ந்தெடுக்க அருள் வேண்டி இப்பலியில் இணைந்திடுவோம்.

## முதல் வாசக முன்னுரை (தொடக்க நூல் 18: 1-10)

நம்பிக்கையின் தந்தை என்று போற்றப்பெறும் ஆபிரகாம் கடவுள்மீது அளவுகடந்த நம்பிக்கை, பக்தி கொண்டு வாழ்ந்தார். ஆண்டவரின் வார்த்தையை நம்பினார். அவ்வாறே அவருக்குக் கடவுள் ஆசி வழங்கி, பூமியில் அவர் பெயர் நிலைத்திருக்கச் செய்திருக்கிறார். நாமும் கடவுள்மீது விசுவாசமும் பொறுமையும் கொண்டு வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (கொலோசையர் 1: 24-28)

கிறிஸ்துவின் பாடுகளைத் தனதாக்கிக் கொண்டு இறைவார்த்தையை முழுமூச்சோடு பறைசாற்றிய திருத்தூதர் பவுல் போன்று கிறிஸ்துவுக்கு உயிருள்ள

சாட்சிகளாக வாழும் மனநிலை பெற்றவர்களாய் வாழ அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அருளின் ஊற்றே எம் இறைவா!

எம் திரு அவையை ஆசீர்வதியும். நாங்கள் பலவற்றைப்பற்றி கவலை கொள்ளாமல் உம் பாதம் அமர்ந்து உமதருளைப் பெறும் நல்மக்களாக வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா!

இறை நம்பிக்கையை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எம் சகோதர சகோதரிகள் மேல் இரக்கம் கொள்ளும். உம் பிரசன்னத்தை எல்லா நிலைகளிலும் கண்டுணர்ந்து, உம்மில் இணைந்து வாழும் வரத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அருளின் இறைவா!

செயல்களில் மட்டுமே ஈடுபாடு கொண்டு உம்மைத் தேடாது வாழும் எம் இளைய தலைமுறையினர், செபத்தின் மேன்மையை உணர்ந்து, ஞானம் நிறை செயல்களில் தங்களை ஈடுபடுத்தி வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஞானத்தின் இருப்பிடமே எம் இறைவா!

படிக்கின்ற பிள்ளைகள் அனைவரும் நல்முறையில் கற்கவும், தூய ஆவியின் துணை கொண்டு வாழ்வில் முன்னேற்றம் கண்டிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com